முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

ඉතිහාසය I
வரலாறு I
History I

33 T I

පැයයි
ஒரு மணித்தியாலம்
One Hours

තෙවන වාර විභාගය 2023(2024)
மூன்றாம் தவணைப் பரீட்சை 2023(2024)
Third Term Examination 2023(2024)

10 වන ශ්‍රේණිය
தரம் 10
Grade 10

அறிவுறுத்தல்கள் :

1. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
2. விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
3. விடைத்தளில் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்து பின்பற்றுக.
4. இலக்கம் 01 - 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதின் மூலம் காட்டுக.

1. பின்வரும் மூலாதாரங்களுள் புத்தபெருமான் இலங்கை வருகையிலிருந்து மகாசேன மன்னனின் ஆட்சிக்காலம் வரையிலான வரலாற்றை உள்ளடக்கிய மூலாதாரம் எது?
   1. பூஜாவலிய 2. நிக்காய சங்கிரகய 3. ராஜாவலிய 4. மகாவம்சம்

2. பின்வரும் தகவல்களுள் வம்சத்துப்பகாசினி சம்பந்தமான மிகவும் சரியான தகவல்களை உள்ளடக்கிய விடை யாது?
   1. கி.பி 5ம் நுற்றாண்டு தொடக்கம் 6ம் நுற்றாண்டு காலப்பகுதியில் எழுதப்பட்டமை.
   2. அநுராதபுரக்கால வரலாற்றை அறிந்து கொள்ளக் கூடிய மிகவும் முக்கியமான எழுத்தாவணம் ஆகும்.
   3. பராக்கிரமபாகு மன்னனின் இளமைக் காலம் பற்றிய தகவல் உள்ளடக்கப்பட்டமை.
   4. பாளி மொழியில் எழுதப்பட்டுள்ள மூலாதாரமாகும்.

3. வரலாற்றுக் கால ஒழுங்கு முறையை வகுத்துக் கொள்ள மிகவும் பயனுடைய மூலாதாரம் எது?
   1. இலக்கிய மூலாதாரம் 2. கல்வெட்டுகள் 3. சாசனங்கள் 4. தொல் பொருட்கள்

4. கி.பி 5ம் நுற்றாண்டில் இலங்கைக்கு வருகை தந்து இரண்டு வருடங்கள் அபயகிரி விகாரையில் தங்கியிருந்து இலங்கை பற்றிய தகவல்களை திரட்டிய வெளிநாட்டவர் யார்?
   1. ஹியுங்சான் 2. பாகிய தேரர் 3. ரிபைரோ 4. பல்டியஸ்

5. இரணைமடுப் படிவு பற்றிய பிழையான கூற்றினைத் தெரிவு செய்க.
   1. அதிவரண்ட வலயத்தில் நிலத்துக்கு அடியில் காணப்பட்ட சரளைப்படிவு.
   2. 125000 ஆண்டுகள் பழைமையானது.
   3. ஹொலோசியன் யுகத்தில் உருவாக்கப்பட்டது என நம்பப்படுகிறது.
   4. கற்காலத்துக்குரிய கல்லாயுதங்கள் கிடைக்கப் பெற்றுள்ளமை.

- **பின்வரும் தகவல்களை அடிப்டையாகக் கொண்டு 6ம் 7ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

  A – குகையினுள் அடக்கம் செய்யப்பட்ட மனிதனின் ஒன்பது எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டமை.
  B - எலும்புக் கூட்டை வளைத்துப் புதைத்தல்.
  C - உணவை சுட்டு சாப்பிட்டமைக்கான ஆதாரம் கண்டுபிடிக்கப்பட்டமை.
  D – அஸ்தி பாதுகாத்து வைத்தல்.

6. வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் மேற்கொள்ளப்பட்ட மரணச் சடங்கு முறைகளை மாத்திரம் உள்ளடக்கிய விடைத் தொகுதி.
   1. A, B 2. A, C 3. B, D 4. C, D

7. இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த கிதுல்கல பெலிலேன பிரதேசம் சம்பந்தமான தகவல்களை உள்ளடக்கிய விடைத் தொகுதி.
   1. A, D 2. A, C 3. B, D 4. C, D

8. பின்வரும் குளங்களுள் இளநாக மன்னன் நிர்மாணித்த குளம் எது?
1. யோத வாவி 2. கந்தளாய் குளம் 3. சொரபொர வாவி 4. திஸ்ஸமகாராம குளம்

- **பின்வரும் அட்டவணையில் காணப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 9ம், 10ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

| பதவி | கல்வெட்டு | கல்வெட்டில் குறிக்கப்பட்ட நபர் |
|---|---|---|
| A - பருமக | D – பெரிய புளியன் குளம் | G – சிவ, சுமண, திதென |
| B - கிராமிக | E – சிதுல்பவ்வ கொரவக்கல் அருகில் | H – சுமணாவின் குடும்பம் |
| C – கஹபதி | F – கொக்கல்கந்த | I – தொட்ட போஜக |

9. கிராமக் குளங்களை நிர்வகித்த அதிகாரிகள் சம்பந்தமான தகவல்களை உள்ளடக்கிய விடைத்தொகுதி யாது?
1. A, F, I 2. A, E, G 3. B, F, I 4. C, D, H

10. புராதன கால கிராமங்களில் வாழ்ந்த கிராமத் தலைவர்கள் ஒவ்வொருவருடன் நல்லுறவுடன் செயற்பட்டமை தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய விடைத் தொகுதி யாது?
1. A, D, H 2. A, E, I 3. B, E, G, 4. C, F, G

11. தனது பத்தாவது ஆட்சி வருடத்தில் கிராமங்களுக்கு எல்லைகள் வகுக்கப்பட்டதாக மகாவம்சத்தில் குறிப்பிட்டுள்ள மன்னன் யார்?
1. தேவநம்பிய திஸ்ஸன் 2. காவந்தீஸன் 3. வசபன் 4. பண்டுகாபயன்

12. துட்டகைமுனு மன்னனின் இராஜதந்திர செயற்பாட்டை வெளிப்படுத்தும் முக்கியமான சந்தர்ப்பம் பின்வருவனவற்றுள் எது?
1. தனது எதிராளியான எல்லாளனின் கல்லறைக்கு உரிய மரியாதை செலுத்தும்படி கட்டளையிடல்.
2. விகாரைகளைக் கட்டுவதனூடாக பௌத்த மதத்தின் வளர்ச்சிக்கு உதவுதல்.
3. ருவன்வெலிசாயாவைக் கட்டிய அனைவருக்கும் சம்பளம் வழங்குதல்.
4. எல்லாளனைத் தோக்கடித்து நாட்டை ஒன்றுபடுத்துதல்.

13. பின்வரும் நிகழ்வுகளுள் இலங்கையை ஒன்றுபடுத்தி பொலன்னறுவையை ஆட்சி செய்த முதலாம் விஜயபாகு மன்னன் கேட்டிராத நிகழ்வு யாது?
1. வெள்ளரச மரக்கிளை நடும் சம்பவம்.
2. சோழரின் ஆக்கிரமிப்பு
3. பொலன்னறுவை கல்விகாரை நிர்மாணிப்பு
4. நான்காம் உதய மன்னனால் உருவாக்கப்பட்ட சொரபொரவாவி கல்வெட்டு.

14. அநுராதபுரத்தை ஆட்சி செய்த முதலாம் கஜபாகு மன்னன் எந்த அரச வம்சத்தை சேர்ந்தவன் ஆவான்?
1. மௌரிய 2. லம்பகர்ண 3. கலிங்க 4. பாண்டிய

15. புராதன காலத்தில் சேனைப்பயிர்ச் செய்கையை மேற்கொண்ட விவசாயிகளிடம் அறவிடப்பட்ட வரி எவ்வாறு அழைக்கப்பட்டது?
1. மதரமஞ்சக்க 2. தக்கபதி 3. போஜகபதி 4. கெதிஅட

16. ஐந்நூற்றுவர்கள் என அழைக்கப்பட்டவர்கள் இலங்கைக்கு எந்நாட்டிலிருந்து வந்த வியாபாரிகளாவர்?
1. ஆப்கானிஸ்தான் 2. கம்போஜா 3. இந்தியா 4. மெசிடோனியா

17. மகாவலி கங்கையை மறித்து அணையொன்றைக் கட்டி பொலன்னறுவை வரை நீரைக் கொண்டு செல்ல வெட்டப்பட்ட கால்வாய் எது?
1. மினிப்பே கால்வாய் 2. எலஹறா கால்வாய் 3. தல்வத்து கால்வாய் 4. யோத கால்வாய்

18. பின்வரும் நிரல் i இல் இலங்கையை ஆட்சி செய்த மன்னர்கள் சிலரும், இம்மன்னர்கள் கட்டிய வைத்திய சாலைகள் சில நிரல் ii இலும் தரப்பட்டுள்ளன. இதனை இணைப்பதனூடாகப் பெறப்படும் சரியான விடைத் தொகுதியை தெரிவு செய்க.

| **நிரல் i** | **நிரல் ii** |
|---|---|
| 1. முதலாம் பராக்கிரமபாகு | A – உபசக்கரோக நாசக |
| 2. பண்டுகாபய மன்னன் | B – பஸவந்திநாமசால |
| 3. நான்காம் காசியப்ப மன்னன் | C – சீவகசாலா |
| 4. முதலாம் உபதிஸ்ஸ மன்னன் | D – ஆலாஹனா பிரிவெனா |

1. A C D B 2. B C D A 3. C D B A 4. D C A B

19. தீயிட்டுக் கொளுத்தி உருவாக்கிக் கொண்ட நவதெனி சேன எனும்சொற் பிரயோகம் எதில் காணப்படுகிறது?
1. சத்தர்மரத்னாவலிய 2. உம்மக்க ஜாதக 3. சமந்தபாசாதிகா 4. கல்வெட்டுக்கள்

20. மண்டகல எனும் இடத்திலுள்ள கல்வெட்டில் துலதர சுமண எனும் பெயரால் அறிமுகப்படுத்தியுள்ள நபர்கள் யாவர்?
1. கம்மாளர் 2. பொற்கொல்லர் 3. தந்தத் தொழிலாளர் 4. குயவர்கள்

21. மாந்தொட துறைமுகத்திற்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பழைய இந்துக் கோயில் எது?
1. திருக்கோணேஸ்வரம் 2. முன்னேஸ்வரம் 3. திருக்கேதீஸ்வரம் 4. கந்தசாமி கோயில்

22. பௌத்தர்களின் புனித இடமான ஸ்ரீபாத மலையை ஆதாமின் மலை என போற்றப்படும் இனத்தவர் யார்?
1. முஸ்லிம்கள் 2. இந்துக்கள் 3. உரோமன் கத்தோலிக்கர் 4. புரட்டஸ்தாந்தர்

23. பின்வரும் பிரதேசங்களுள் இயற்கை வளியைப் பயன்படுத்தி இரும்பைப் பிரித்தெடுப்பதற்கான ஆதாரம் கண்டுபிடிக்கப்பட்ட பிரதேசம் எது?
1. தெஹிகஹ அலகந்த 2. சமனலவெவ 3. பெரகல 4. உடரஞ்சாமடம

24. பின்வரும் கட்டடங்களுள் தென்கிழக்காசிய நாடுகளின் கலைப்பண்பினை வெளிப்படுத்தும் கட்டடம் எது?
1. லங்காதிலக விகாரை 2. திவங்க சிலைமனை 3. பொத்குல் விகாரை 4. சத்மஹல் பிரசாதய

- **பின்வரும் அட்டவணையிலுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 25ம், 26ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

| முதலாவது மன்னன் | எதிரிகளின் ஆக்கிரமிப்பு | முக்கிய நிகழ்வுகள் |
|---|---|---|
| A – முதலாம் புவனேகபாகு | D – ஆரியச்சக்கரவர்த்தி | G – களனி விகாரை புனர்நிர்மாணிப்பு |
| B - மூன்றாம் விஜயபாகு | E – ஜாவாநாட்டு சந்திரபானு | H – எகிப்து சுல்தானிடம் தூதுக்குழுவை அனுப்புதல் |
| C – நான்காம் புவனேகபாகு | F – செங்கோ | I – இபுனு பதூதா இலங்கை வருகை |

25. தம்பதெனிய இராசதானியுடன் தொடர்புடைய விடைகளை உள்ளடக்கிய விடைத் தொகுதி.
1. A, F, I 2. A, E,H 3. B, E, G, 4. C, F,I

26. இலங்கையில் ஆறாவது இராசதானியுடன் தொடர்பு பட்ட விடயங்களை உள்ளடக்கிய விடைத் தொகுதி.
1. A, F, I 2. A, E,H 3. B, E, G, 4. C, F,I

27. பொலன்னறுவையை மூன்று முறை ஆட்சி செய்த லீலாவதி அரசி,
1. முதலாம் விஜயபாகு மன்னனின் மனைவியாவாள்.
2. முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் மனைவியாவாள்.
3. நிஸங்கமல்ல மன்னனின் மனைவியாவாள்.
4. இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் மனைவியாவாள்.

28. தெதிகம பராக்கிரமபாகுவின் சகோதரியை திருமணம் செய்த பிரபு யார்?
1. சேனா லங்காதிகார செனவிய 2. நிஸங்க அலகேஸ்வர
3. வீர அலகேஸ்வரன் 4. மூன்றாம் விக்ரமபாகு

29. சிங்கள இலக்கியத்தின் பொற்காலம் என போற்றப்பட்ட யுகம் எது?
1. யாப்பகுவ 2. குருநாகல் 3. கம்பளை 4. கோட்டே

30. தொன் யுவான் எனும் பெயரில் பௌத்த மதத்தைத் தழுவிக் கொண்ட வீரசுந்தர பண்டாரனின் மகன் மலையக இராச்சியத்துக்கு அரசனாகிய பின் எவ்வாறு அழைக்கப்பட்டான்?
1. மகா அஸ்தான 2. கொணப்பு பண்டார
3. முதலாம் விமலதர்ம சூரியன் 4. இரண்டாம் இராஜசிங்கன்

31. வெள்ளி பூண் இடப்பட்ட, முனை வளைந்த பிரம்பு ஒன்று பதவியின் அடையாளமாகக் கொண்டு கண்டி இராச்சியத்தில் பிராந்திய செய்திப் பரிமாற்றம் செய்த அதிகாரி யார்?
1. கடுப்புள்ளே 2. முகாந்திரம் 3. உண்டியரால 4. விதானை

32. ஹெந்த பத்த அமைப்பிற்குரிய செயற்பாடு யாது?
1. போக்குவரத்து நடவடிக்கை 2. மட்பாத்திரம் செய்தல்
3. சலவை நடவடிக்கை 4. பிடவை நெசவு நடவடிக்கை

- **மறுமலர்ச்சி காலத்துக்குரிய சில துறைகள் பற்றிய விபரங்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு 33ம், 34ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

| | | |
|---|---|---|
| A – திருச்சபையை விமர்சித்தல் | D – போலந்து | G – கொபர்னிகஸ் |
| B – டிவினா கொமிடியா | E –இங்கிலாந்து | H – தாந்தே |
| C – சூரிய மையக் கொள்கை | F – இத்தாலி | I – ஜோன் வைக்கிலிப் |

33. நவீன வானியல் விஞ்ஞானத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர் சம்பந்தமான தகவல்களை உள்ளடக்கிய விடைத் தொகுதி யாது?
1. A, D, I 2. B, E,G 3. C, D, G, 4. C, E, G

34. மறுமலர்ச்சிக் காலத்தில் சமய சீர்த்திருத்தம் தொடர்பான தகவல்களை மாத்திரம் கொண்ட விடைத் தொகுதி யாது?
1. A, D, I 2. B, F,H 3. B, E, H 4. C, E, G

- **பின்வரும் கருத்துச் சோடிகளை அவதானித்து கேட்கப்பட்டுள்ள 35ம், 36ம், 37ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

A. 1. குசுமாசன தேவியை கண்டி இராச்சியத்திற்கு அரசியாக்குவதற்கு முயற்சித்தல்.
2. தந்துரே போர்

B. 1. மலையக ஒப்பந்தம்
2. இலங்கையின் கரையோரப் பிரதேசம் பிரித்தானியர் வசமாதல்.

C. 1. கண்டி இராச்சியத்தில் நாயக்க வம்சம்ஆரம்பித்தல்.
2. நரேந்திரசிங்க மன்னன் வாரிசு இன்றி இறந்தார்.

D. 1. மனிதன் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.
2. ஹொலோசியன் யுகம்

35. முதலாவது இரண்டாவதன் உருவாக்கத்திற்கு காரணமான சோடிப் பதம் எது?
1. A 2. B 3. C 4. D

36. இரண்டாவது ஏற்படுவதற்கு முதலாவது காரணமாக அமைந்த சோடிப்பதம் எது?
1. A 2. B 3. C 4. D

37. முதலாவதுக்கும் இரண்டாவதுக்கும் எவ்வித தொடர்பும் அற்ற சோடிப் பதம் எது?
1. A 2. B 3. C 4. D

38. 1505 ஆம் ஆண்டு போர்த்துக்கேய மன்னனால் கிழக்கு நாடுகளின் இராசப் பிரதிநிதியாக நியமித்து அனுப்பப்பட்டவர் யார்?
1. வாஸ்கொடகாமா 2. லொரன்சோத அல்மேதா
3. பிரான்ஸிஸ் கோடி அல்மேதா 4. சமோரின்

39. ஒல்லாந்தரின் கிழக்கிந்திய வர்த்தக நிலையம் அமைந்துள்ள பத்தேவியா அமைந்துள்ள தீவு யாது?
1. மலேசியா 2. சுமாத்திரா 3. பிலிப்பைன்ஸ் 4. ஜாவா

40. போத்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு ஒல்லாந்தரின் உதவியை பெற்றுக் கொண்ட முதலாவது கண்டி இராச்சிய மன்னன் யார்?
1. முதலாம் விமலதர்ம சூரியன் 2. இரண்டாம் இராஜசிங்கன்
3. செனரத் மன்னன் 4. கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன்

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**Provincial Education Department (NWP)**

| | | |
|---|---|---|
| ඉතිහාසය II<br>வரலாறு II<br>History II | 33 T II | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |
| තෙවන වාර විභාගය 2023(2024)<br>மூன்றாம் தவணைப் பரீட்சை 2023 (2024)<br>Third Term Examination 2023 (2024) | අමතර කියවීම් කාලය මිනිත්තු 10 යි<br>மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்<br>Additional Reading time 10 minutes | 10 වන ශ්‍රේණිය<br>தரம் 10<br>Grade 10 |

வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களை தெரிவு செய்வதற்கும் முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.

அறிவுறுத்தல்கள் :

- பகுதி I முதலாம் வினா கட்டாயமானது.
- பகுதி II இலிருந்து **நான்கு** வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து **ஒரு** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- எல்லாமாக 6 வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

01. (அ) பகுதி i இல் தரப்பட்டுள்ள வரலாற்று இடங்கள் அனைத்தையும் இலங்கை படத்திலும் பகுதி ii ல் தரப்பட்டுள்ள வரலாற்று இடங்களை உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

1. அனுராதபுரம், கிதுல்கல பெலிலேன, கோகர்ணதித்த, குபுக்கன் ஓயா, மாகம, சொரபொர வாவி, லங்காபடுன, மின்னேரியா குளம், யாழ்ப்பாணம், தெவிநுவர, கலாஓயா, கன்னொருவ (12 புள்ளிகள்)

2. இத்தாலி, கொன்ஸ்தாந்து நோபில், கள்ளிக் கோட்டை, பத்தேவியா, மலாயா தீபகற்பம், பாரசீக வளைகுடா (6 புள்ளிகள்)

(ஆ) 1. பின்வரும் A, B, C, D எனும் எழுத்துக்களால் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறையில் தருக.

A – டிமுன்டோ எனும் நூலை எழுதிய கிரேக்க எழுத்தாளர்.

B - புராதன காலத்தில் கால்வாய்களை நிர்மாணித்த அதிகாரிகள் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்.

C – மகா பராக்கிரமபாகு மன்னனின் பிறப்பை நினைவு கூறுமுகமாக அமைக்கப்பட்ட தூபி.

D – நவீன வானியல் விஞ்ஞானத்தின் தந்தை என போற்றப்படுபவர்.

(4 புள்ளிகள்)

- **A, B எனும் உருக்களை பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.**

A



2. 1. A எனும் உருவிலுள்ள நிர்மாணிப்பு யாது?
   2. இது எங்கு அமைந்துள்ளது?
   3. எது எக்காலத்துக்குரியது?
   4. இலங்கையில் இது போன்ற நிர்மாணிப்பு காணப்படும் மற்றுமொரு பிரதேசத்தை குறிப்பிடுக?

(4 புள்ளிகள்)

3. 1. B எனும் உருவிலுள்ள நபர் யார்?
   2. இவர் வாழ்ந்த நாடு எது?
   3. மறுமலர்ச்சிக் காலத்தில் இவர் வானியல் ஆராய்ச்சிக்காக கண்டு பிடிக்கப்பட்ட உபகரணம் யாது?
   4. இவ்வுபகரணத்தைப் பயன்படுத்தி கண்டுபிடிக்கப்பட்ட வான் பொருளொன்றைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

B



## பகுதி – II

02. 1. a) களுகங்கைக்கு அண்மையில் அமைந்துள்ள ஈரவலயத்துக்குட்பட்ட வரலாற்றுக்கு முற்பட்ட கால குடியிருப்புக்கள் மூன்று தருக?

b) வரலாற்றுக்கு முற்பட்ட கால குடியிருப்பு ஒன்றான மாணியம்கம அமைந்துள்ள ஆற்றுப்பள்ளத்தாக்கு எது? (3 புள்ளிகள்)

2. முன் வரலாற்றுக்கால மக்கள் தொழினுட்பத்தைப் பயன்படுத்திய இரண்டு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

3. முன் வரலாற்றுக்கால மக்களின் வாழ்க்கைக் கோலத்தின் பண்புகள் இரண்டினை விளக்குக? (5 புள்ளிகள்)

4. வரலாற்றுக் கால மக்களின் குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய பிரதான காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

03. 1. பின்வரும் A, B, C என்பவற்றில் அரசுக்கு முற்பட்ட கால அரசியல் நடவடிக்கைகள் சம்பந்தமான தகவல்கள் அடங்கிய கல்வெட்டுக்கள் பற்றிய விபரம் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து முன்னால் எழுதுக.

A – ஏழைக்குடியானவன் அடுத்த போகத்தில் தருவதாகக் கூறிய வாக்குறுதியின் பேரில் கமிகவிடம் நெல் மூட்டையொன்றை கடனாகப் பெற்றுக் கொண்ட செய்தி.

B –திஸ்ஸ எனும் நடனக்கலைஞரின் மனைவி பருமகலு பதவி வகித்ததாகக் குறிப்பிடும் கல்வெட்டு.

C – போசணி அரசன் எனும் சொல்லால் அறிமுகப்படுத்திய பிராந்திய நிர்வாகி.

(மெதகம புராதன விகாரை கல்வெட்டு / கனகந்த விகாரை கல்வெட்டு / சமந்தபாசாத்திகாவ / ஜாதக அடகதா / எம்புல்அம்பே புராதன கல்வெட்டு) (3 புள்ளிகள்)

2. பின்வரும் அதிகாரிகள் கல்வெட்டில் குறிப்பிட்டுள்ள விதத்தை A, B, C, D எனும் ஒழுங்கில் எழுதுக.

A – வர்த்தக நடவடிக்கைகளுக்கான தலைவர்.

B – காசு அச்சிடும் பிரிவின் தலைவர்.

C – மபுறுமுகா

D – நகர கட்டட நிர்மாணி (4 புள்ளிகள்)

3. புராதன கால மக்கள் வெவ்பிரபாதனய எனும் குளத்தொகுதி நிர்மாணிக்கப்பட்டதன் மூலம் எதிர்பார்த்த பிரதான நோக்கங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக? (5 புள்ளிகள்)

4. வசப மன்னனின் முக்கியத்துவங்கள் மூன்றினை சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

04. 1. a) இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் கேத்திர கணித வடிவமைப்பில் தயாரிக்கப்பட்ட கல்லாயுதங்கள் செய்வதற்குப் பயன்படுத்திய பாறை வகைகள் 2 குறிப்பிடுக.

b) இக்கல்லாயுதங்களைச் செய்வதற்கு பயன்படுத்திய தொழினுட்ப முறையை அழைத்த பெயர். (3 புள்ளிகள்)

2. அம்பன் கங்கையை மறித்துக் கட்டப்பட்ட எலகரக் கால்வாய் மூலம் நீரைப் பெற்றுக்கொள்ளும் நான்கு குளங்களைக் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

3. பாரிய குளமொன்றில் குளக்கட்டு மற்றும் மடைக் கதவு என்பவற்றின் பயன்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக? (5 புள்ளிகள்)

4. a) புராதன மக்களிடையே காணப்பட்ட உள்நாட்டு சம்பிரதாயங்கள் இரண்டு குறிப்பிடுக.

b) பால்மடு யாகம் பற்றி சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

05. 1. பண்டைய சமூகத்தில் நிர்வாகத்தைக் கொண்டு நடத்தும் மூன்று தாபனங்கள் காணப்பட்டன. அத்தாபனங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

2. இலங்கையில் உள்நாட்டு வர்த்தகம் தொடர்பாக புராதன சந்தைகள் முறையாக நிர்வகிப்பதற்கு நான்காம் உதய மன்னன் பிறப்பிக்கப்பட்ட சட்டங்கள் நான்கு தருக? (4 புள்ளிகள்)

3. இலங்கையில் புராதன சமூகத்தில் விவசாய நடவடிக்கைகள் மூன்று வழிகளில் இடம்பெற்றன. இவற்றுள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக? (5 புள்ளிகள்)

4. a) பண்டைய மக்கள் உணவு சமைக்கும் போது பெரும்பாலும் பயன்படுத்திய எண்ணெய் வகைகள் இரண்டைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

b) பண்டைய மக்கள் தனது உணவைத் தயாரிக்கும் போது கருத்தில் கொள்ளப்பட்ட விடயங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக? (4 புள்ளிகள்)

06. 1. முதலாம் நகராக்கத்திற்குட்பட்ட புராதன நகரங்கள் மூன்றினைக் குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

2. இலங்கையில் புராதன நகரங்களின் வீழ்ச்சிக்கான காரணங்கள் நான்கினை குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

3. இரண்டாம் நகராக்கத்தின் போது வளர்ச்சியடைந்த நகரங்களில் தெளிவாகக் காணக்கூடிய இயல்புகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

4. கோட்டை இராச்சியத்தை ஆட்சி செய்த ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் அரசியல் முக்கியத்துவங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

07. 1. கண்டி இராச்சிய மன்னனால் விசாரிக்கப்படும் வழக்குகள் மூன்றினைத் தருக? (3 புள்ளிகள்)

2. முதலாம் விமலதர்ம சூரிய மன்னன் கண்டி இராச்சியத்தின் மன்னனான போது எதிர் கொண்ட சவால்கள் நான்கு தருக? (4 புள்ளிகள்)

3. கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னன் இலங்கையில் பௌத்த மதத்தை விருத்தி செய்ய மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

4. கண்டி இராச்சியத்தின் சமூக அமைப்பில் காணக்கூடிய பிரதான அம்சங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக? (6 புள்ளிகள்)

## பகுதி – III

08. 1. a) மறுமலர்ச்சி ஏற்படுத்துவதற்கு முன் ஐரோப்பாவில் காணப்பட்ட இரண்டு கால கட்டங்களைக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

b) ஐரோப்பாவில் மறுமலர்ச்சி ஏற்பட்ட நாடு எது? (1 புள்ளி)

2. மறுமலர்ச்சிக் காலத்தில் சித்திரக் கலையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

3. மறுமலர்ச்சிக் காலத்தில் அரசியல் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

4. மறுமலர்ச்சியானது இலங்கை மீது செலுத்திய தாக்கங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

09. 1. ஐரோப்பாவில் காணப்பட்ட புராதன வர்த்தக நகரங்கள் மூன்று தருக? (3 புள்ளிகள்)

2. ஐரோப்பியர் ஆசியாவுக்கு வருகை தந்தமைக்கான நோக்கங்கள் இரண்டினைக் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

3. ஆசியாவுக்குச் செல்வதற்குப் புதிய கடல் வழியை கண்டுபிடிப்பதில் ஏனைய ஐரோப்பிய நாடுகளை விடப் போர்த்துக்கல் முன்னணியில் இருந்தமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக? (5 புள்ளிகள்)

4. சீதாவக்கை இராச்சியம் வீழ்ச்சியடைந்தமைக்கு செல்வாக்குச் செலுத்திய காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved


வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)


33 T II

| | | |
|---|---|---|
| තෙවන වාර විභාගය 2023(2024)<br>மூன்றாம் தவணைப் பரீட்சை 2023(2024)<br>Third Term Examination 2023(2024) | ඉතිහාසය II<br>வரலாறு II<br>History II | 10, 11 වන ශ්‍රේණිය<br>தரம் 10, 11<br>Grade 10 , 11 |

1. (අ) (i)
1. (அ) (i)
1. (a) (i)

විභාග අංකය / சுட்டெண் / Index No. ..........................




Africa
Indian Ocean
N